WILD FOREST FOUNDATION
wild-forest.org

பக்கங்கள்: 05

THEEMPUNAL
தீம்புனல்

மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:40 | 28.12.2023 வியாழக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053

# விடைபெற்றார் விஜயகாந்த்



▶05

## 1952 – 2023

# யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கும் டெங்கு

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு வாரத்திற்குள் மூன்றாவது டெங்கு நோயாளி மரணமானதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 23 வயதுடைய இளைஞன் நேற்று உயிரிழந்துள்ளார்.

முன்னதாக, யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 11 மாத குழந்தையும் யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 25 வயதுடைய யுவதியும் டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் 136 டெங்கு நோயாளர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். நாடளாவிய ரீதியில் வேகமாக பரவி வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகளும் மக்களும் சமமாக செயற்பட வேண்டுமென இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

# எரிபொருள் பாவனையில் வீழ்ச்சி

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு எரிபொருள் பாவனை கணிசமாகக் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஷெல்டன் பெர்னாண்டோ கூறுகையில், "எரிபொருளுக்கான நுகர்வோர் தேவை சுமார் 50 சதவீதத்தால் குறைந்துள்ளதால் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

விலைவாசி உயர்வால் மக்களின் வாகனப் பாவனையும் குறைந்துள்ளது. பலர் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துகின்றனர். பழைய பாவனையுடன் ஒப்பிடும் போது அத்தியாவசியப் பயணங்களுக்கு வாகனங்களில் எண்ணெய் வைத்துள்ளனர். முச்சக்கர வண்டிகள், பைக்குகளை ஓரளவே பயன்படுத்துகின்றனர்" என்றார்.

# மட்டக்களப்பு கடற்கரையில் கரையொதுங்கிய பொருள்



மட்டக்களப்பு - கோட்டைக்கல்லாறு கடற்கரையில் மர்மப் பொருள் ஒன்று இன்று (28) காலை கரையொதுங்கியுள்ளது.

அப்பகுதி கடலில் கடந்த 27 ஆம் திகதி மாலை மர்மப் பொருள் ஒன்று மிதந்துள்ளதை அங்குள்ள மீனவர்கள் அவதானித்துள்ளனர்.

இப்பொருள் சிவப்பு நிறத்தில் கூம்பக வடிவில் போத்தல் போன்று பெரியதாக அமைந்துள்ளதுடன் பொருளின் மேற்பகுதியில் பி.எம்.ரி. எனவும் பின்பக்கம் பி என்ற எழுத்தும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. ஒருபக்கம் சிறிய ரக ரயர் ஒன்று பொருத்தப்பட்டு அதில் இரும்பிலான சங்கிலியும் பொருத்தப்பட்டுள்ளது.

களுவாஞ்சிகுடி பொலிஸார் அதனைப் பார்வையிட்டுச் சென்றுள்ளதாக என அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# 8 மில்லியன் முட்டை இறக்குமதி

இறக்குமதி செய்யப்பட்ட எட்டு மில்லியன் முட்டைகள் சதொச விற்பனை நிலையங்களுக்கு வழங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச வணிக இதர சட்டபூர்வ கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. அந்த முட்டைகளுக்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அதன் தலைவர் சிறிவலிசுந்தர தெரிவித்தார்.

இன்று (28) முதல் சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக முட்டைகள் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் என தலைவர் தெரிவித்தார்.

பண்டிகைக் காலங்களில் அதிக தேவையினால் பல கடைகளில் முட்டை இருப்புக்கள் தீர்ந்துவிட்டதாகவும், நாளொன்றுக்கு ஒரு மில்லியன் முட்டைகள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# தவறுக்கு வருந்தும் மின்சாரசபை

டிசம்பர் 9 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்வெட்டுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் (PUCSL) தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ விடுத்த அறிக்கையை மறுத்த இலங்கை மின்சாரசபை (இலங்கை) சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட இரண்டு மின்வெட்டுகளை ஆராய்ந்து வரும் இலங்கை மின்சாரசபை அதில் ஒன்று நாசவேலையுடன் தொடர்புடையது என அப்போதைய மின்சாரம் மற்றும் எரிசக்திக்கு பொறுப்பான அமைச்சர் கூறினார். இரண்டு ஆய்வுகளின் விபரங்கள் இன்னும் வெளியிடவில்லை.

அண்மையில் நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்வெட்டுக்கு இலங்கை மின்சார சபையின் தவறே காரணம் என ஒப்புக் கொண்டதாக பேராசிரியர் பெர்னாண்டோ நேற்று (27) ஊடகங்களுக்குத் தெரிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் டக்ளஸ் நாணயக்காரவைத் தொடர்பு கொண்டு இவ்விடயம் தொடர்பாக வினவிய போது, அவர் (நாணயக்கார) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்ததால் இது தொடர்பான கேள்விகளை தலைவரிடம் கேட்க வேண்டும் என்று கூறினார்.

"நானும் அதை ஊடகங்கள் மூலம் பார்த்தேன். நீங்கள் தலைவரிடம் பேசி அறிக்கை தொடர்பான உறுதிப்படுத்தலைப் பெறலாம்," என்று நாணயக்கார தெரிவித்தார். ஊடகச் செய்திகளைத் தொடர்ந்து, பேராசிரியர் பெர்னாண்டோவின் அறிக்கையை இலங்கை மின்சாரசபை மறுத்துள்ளது. இந்த அறிக்கை தவறானது என நிராகரித்துள்ள இலங்கை மின்சாரசபையின் ஊடகப் பேச்சாளர் நோயல் பிரியந்த, இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். விசாரணைகளின் முடிவிற்குப் பிறகு இது தொடர்பாக அறிக்கைகளை வெளியாகும் என்று பிரியந்த கூறினார்.

டிசம்பர் 9 ஆம் திகதி, மாலை 5.10 மணியளவில் நாடளாவிய ரீதியில் மின் தடை ஏற்பட்டதாகவும் பெரும்பாலான பகுதிகளுக்கு ஐந்து மணித்தியாலங்களுக்கு மேலாக மின்சாரம் விநியோகிக்கப்பட்டது. அந்த நேரத்தில், முதற்கட்ட கண்டுபிடிப்புகளின்படி, நாடளாவிய ரீதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதற்கான காரணம், கொத்மலையில் இருந்து பியகம வரையிலான கடத்தல் பாதையில் ஏற்பட்ட கோளாறு, மின்னல் தாக்கம் காரணமாக ஏற்பட்டதாக இலங்கை மின்சாரசபை கூறியது.

இச்சம்பவம் தற்போது மின்சாரசபையின் மேலதிக பொது முகாமையாளர் தலைமையில் உள்ளக விசாரணைக் குழு, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சினால் நியமிக்கப்பட்ட வெளி விசாரணைக் குழு ஆகிய இரண்டு குழுக்களால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மின்வெட்டுக்கான முக்கிய காரணங்களை ஆய்வு செய்தல், இச்சம்பவம் தொடர்பாக இ.போ.ச அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் கடைப்பிடிக்கும் நடைமுறைகள் குறித்து ஆய்வு செய்தல் மற்றும் எதிர்காலத்தில் இதுபோன்ற தோல்விகள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கு உள்ளகக் குழு கடமைப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் மின்சாரத்தை தடையின்றி வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட வகையில் வர்த்தமானி மூலம் வழங்கப்பட்ட உத்தரவுகளை மின்சாரத்துறை அமைச்சு புறக்கணித்துள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். 2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக மின்சாரத்துறை அமைச்சுக்கும் இலங்கை மின்சாரசபைக்கும் தாம் பதவியில் இருக்கும் போது மின்சாரம் தடைப்படுவதை தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த 9 ஆம் திகதி சுமார் 5 மணித்தியாலங்கள் மின்தடை காரணமாக 600 கோடி ரூபாய்க்கும் அதிகமான நேரடி பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இதற்கு மின்சக்தி அமைச்சரும் செயலாளரும் நட்டஈடு வழங்க வேண்டும் எனவும் ஜனக ரத்நாயக்க கூறினார்.

இதேவேளை, கொத்மலை மற்றும் பியகமவுக்கு இடையிலான மின் பரிமாற்ற கட்டமைப்பு மின்னல் தாக்கத்துக்கு உள்ளானதன் காரணமாகவே நாடு முழுவதும் நேற்று மின்சார விநியோக தடை ஏற்பட்டதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட தரவு பரிசோதனைகளில் இவ்விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் நோயல் பிரியந்த குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும், நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட திடீர் மின்சார தடை தொடர்பில் உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

மின் தடைக்கான உண்மையான காரணத்தை இலங்கை மின்சாரசபை வெளியிடுவதில் மாற்றுக் கருத்து இருக்கிறது. ஒருவர் சொல்வதை இன்னொருவர் மறுக்கிறார், இப்படிப்பட்ட சிக்கலில் இருக்கிறது இலங்கை மின்சாரசபை. மின் தடையால் எற்பட்ட பொருளாதார நஷ்டத்துக்கு பதில் சொல்லப்போவது யார்?

# ரஷ்யாவுக்குச் செல்கிறார் மோடி

ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் லாவ்ரோவ் உடனான ஆலோசனைக்குப் பின், பத்திரிகையாளர்களை சந்தித்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், அடுத்த ஆண்டு ரஷ்யாவில் நடக்கும் உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி, ஜனாதிபதி புட்டினை சந்திப்பார் என நம்பிக்கை தெரிவித்தார்.

எரிசக்தி மற்றும் இராணுவ-தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பு, இருதரப்பு உறவுகள் ஆகியவற்றை குறித்து விவாதிக்க 5 நாள் சுற்றுப்பயணமாக, அமைச்சர் ஜெய்சங்கர் ரஷ்யா சென்றுள்ளார்.

அங்கு ஜனாதிபதி புட்டின், துணை பிரதமர் டெனிஸ் மாண்டுரோவ், வெளியுறவுத் துறை அமைச்சர் லாவ்ரோவ் ஆகியோருடன் அவர் ஆலோசனையில் ஈடுபட்டார்.

பின்னர் பத்திரிகையாளர்களை சந்தித்த ஜெய்சங்கர், "எங்கள் நண்பரான பிரதமர் மோடியை ரஷ்யாவில் பார்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைவோம்" என ஜனாதிபதி புட்டின் கூறியதாக தெரிவித்தார்.

## அறுவை சிகிச்சையின் போது நோயாளியைத் தாக்கிய மருத்துவர்

கண் அறுவை சிகிச்சையின்போது வயதான நோயாளியை தலையில் தாக்கிய மருத்துவரை மருத்துவமனை நிர்வாகம் பணியிடை நீக்கம் செய்து நடவடிக்கை எடுத்துள்ளது.

சீனாவில் கண் அறுவை சிகிச்சைக்காக 82 வயது பெண் ஒருவர் மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். சிகிச்சைக்காக அவருக்கு மருத்துவர் குறிப்பிட்ட ஓரிடத்தை மட்டும் மரத்துப் போகச் செய்வதற்கான மயக்கமருந்தை செலுத்தியுள்ளார். அம் மூதாட்டிக்கு முழுமையாக மயக்கம் வராத நிலையில் அறுவை சிகிச்சையின் போது அவர் புலம்பியுள்ளார். அவரால் மருத்துவரின் எச்சரிக்கையையும் புரிந்து கொள்ள முடியவில்லை. இதனால் மருத்துவர் நோயாளியை மூன்று முறை தலையில் தாக்கியுள்ளார். இவை அனைத்தும் மருத்துவமனையில் உள்ள கண்காணிப்பு கமராவில் பதிவாகியுள்ளது.

இந்த அதிர்ச்சிகரமான சம்பவம் கடந்த 2019 ஆம் ஆண்டு சீனாவின் குய்காங் இல் உள்ள ஒரு மருத்துவமனையில் நடந்துள்ளது. இந்தநிலையில் அந்தக் காட்சிகளை, வூகானில் கொவிட் பரவத் தொடங்கிய போது பொது மக்களை எச்சரிக்கை செய்த மருத்துவக் குழுவில் இருந்த மருத்துவரான அய் ஃபென், வைபோ தளத்தில் பகிர்ந்துள்ளார். இது சீன சமூக வலைத்தளங்களில் சமீபத்தில் வைரலானது.

## நிஜ்ஜார் கொலை சந்தேக நபர்கள் நாட்டை விட்டு வெளியேறவில்லை



காலிஸ்தான் பிரிவினைவாதி நிஜ்ஜார் கொலை வழக்கில் தொடர்புடைய இருவர், கனடாவை விட்டு வெளியேறவில்லை எனவும் விரைவில் கைது செய்யப்படலாம் எனவும் தி குளோப் மற்றும் மெயில் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மூன்று காவல்துறை ஆதாரங்களை மேற்கோள் காட்டி, இரண்டு சந்தேக நபர்களும் பல மாதங்களாக காவல்துறை கண்காணிப்பில் இருப்பதாகவும், தற்போது ராயல் கனடியன் மவுண்டட் காவல்துறையால் விரைவில் கைது செய்யப்படலாம் என அந்த செய்தி கூறுகிறது.

இருவர் மீதும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும் போது, கொலையாளிகளுக்கு இந்திய அரசுடனான தொடர்பு குறித்து, காவல்துறை விளக்கமளிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திடீரென மூடப்பட்டது ஈபிள் டவர்



பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் உள்ள உலகப் புகழ் பெற்ற ஈபிள் டவர் 365 நாட்களும் சுற்றுலாப் பயணிகளுக்காக திறந்து இருக்கும் நிலையில் திடீரென நேற்று மூடப்பட்டதால் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது.

ஈபிள் டவரில் வேலை செய்யும் ஊழியர்கள் தங்களது நிர்வாகத்தை எதிர்த்து திடீரென வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் இதனால் ஈபிள் டவர் மூடப்பட்டதாகவும் கூறப்படுகிறது. எதற்காக வேலை நிறுத்தம் செய்கிறோம் என்பது குறித்து தொழிற்சங்க பிரதிநிதிகள் எந்தக் கேள்விக்கும் ஊடகத்திற்கு பதில் அளிக்கவில்லை என்றும் வேலை நிறுத்தம் எத்தனை நாள் நீடிக்கும் என்பது தெளிவாக தெரியவில்லை என்பதால் சுற்றுலாப் பயணிகள் அதிருப்தியில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வட்டுக்கோட்டையில் டெங்கு பரவும் அபாயம்



வட்டுக்கோட்டை-அத்தியடி பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில், வீதியோரத்தில் கொட்டப்பட்டுள்ள குப்பைகள், பிளாஸ்ரிக் கொள்கலன்கள், சூழலுக்கு தீங்கான மருத்துவக் கழிவுகள் ஆகியவற்றால் டெங்கு பரவும் அபாயம் காணப்படுகின்றது.

இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளால் சூழல் மாசடைவதுடன் டெங்கு நுளம்பு பரவும் அபாயமும் காணப்படுகிறது. இவ்வாறு கழிவுகள் கொட்டப்பட்டுள்ள இடத்திற்கு அருகாமையில் தனியார் கல்வி நிலையம் ஒன்றும் அமைந்துள்ளது.

சுகாதார தரப்பு உத்தியோகத்தர்கள், வலி. மேற்கு பிரதேச சபையினர் அன்றாடம் இந்த வீதியால் பயணித்து வருகின்றனர். ஆனால், இவற்றினை கவனிப்பதாக தெரியவில்லை. வீடுகளிலும் வேறு இடங்களிலும் சுகாதாரத்தைக் கடைப்பிடிக்குமாறு கூறி, டெங்கு அபாயம் உள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுத்து வரும் உத்தியோகத்தர்கள் இவற்றினை கண்டும் காணாதது போல் செல்வது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் மூன்று மரணங்கள் டெங்கு தொற்றினால் சம்பவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேராசையால் பறிபோன 26 இலட்சம் ரூபா

சமூக வலைத்தளங்களின் மூலம் யாழ்ப்பாணத்தில் சுமார் 26 இலட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக இரு முறைப்பாடுகள் பாதிக்கப்பட்டவர்களால் நேற்று பொலிஸில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இணையம் மூலம் முதலீடு செய்து பணம் ஈட்டலாம் என்று ஆசையூட்டப்பட்டே இந்த மோசடிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சமூக வலைத்தளங்கள் மூலமே இந்தத் தொடர்புகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு ஏமாற்றப்பட்ட இருவர் முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். ஒருவர் சுமார் 20 இலட்சம் ரூபாவையும் மற்றையவர் சுமார் 6 இலட்சம் ரூபாவையும் இழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சமூக வலைத்தளங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் இவ்வாறான மோசடிகள் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விஷாந்த தெரிவித்துள்ளார்.

# குடு ரோஷனின் 55 மில்லியன் சொத்துகள் பறிமுதல்

பிரபல போதைப்பொருள் வர்த்தகர் 'குடு ரோஷனு'க்கு சொந்தமான சுமார் 55 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஜா-அல பிரதேசத்தில் காணி ஒன்றும் சொகுசு ஜீப் வண்டி ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# குடும்ப மாத வருமானம் குறைந்தது

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக 60 சதவீதத்திற்கும் அதிகமான குடும்பங்களின் மாத வருமானம் குறைந்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியின் தாக்கம் தொடர்பாக நாடளாவிய ரீதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட குடும்ப கணக்கெடுப்பில் இது தெரிய வந்துள்ளதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

கணக்கெடுப்பின் படி இலங்கையில் குடும்பங்களின் மாத வருமானம் 60.5 வீதத்தால் குறைந்துள்ளதுடன், குடும்பங்களின் மாதாந்த செலவுகள் 91 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

# வடமராட்சியில் கரை ஒதுங்கிய அலங்காரக் கப்பல்



யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு உடுத்துறை கடற்கரையில் நேற்று (27) புதன்கிழமை கப்பல் போன்று அலங்கரிக்கப்பட்ட உருவத்துடன் இரதம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. இது வெளிநாட்டில் சமய சம்பிரதாய நிகழ்வுகளில் பயன்படுத்துவதற்காக வடிவமைக்கப்படும் இரதம் என கூறப்படுகிறது.

# 24 மணித்தியாலத்தில் 1,422 சந்தேக நபர்கள் கைது

நாடளாவிய ரீதியில் நேற்று (27) முதல் இன்று (28) அதிகாலை வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 1,422 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் 35 சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

3 சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டவிரோத சொத்துகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், போதைக்கு அடிமையான 37 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட அதிரடிப்படையில் பதிவு செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பட்டியலிலிருந்த 73 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட நடவடிக்கையின் போது பின்வரும் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஹெரோயின் - 347 கிராம்

ஐஸ் - 827 கிராம்

கஞ்சா - 5 கிலோ 475 கிராம்

கஞ்சா செடிகள் - 6,691

மாவா - 208 கிராம்

போதை மாத்திரைகள் 3,574

# நகைகளும் பணமும் திருடிய எழுவர் கைது

வல்வெட்டித்துறை பொலிஸ் உத்தியோகத்தரின் வீடு உள்ளிட்ட சில இடங்களில் இடம்பெற்ற களவுச் சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் 16 பவுண் நகைகளும் மீட்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 4 பேர், மன்னாரைச் சேர்ந்த 2 பேர், முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் என 7 பேர் காங்கேசன் துறை குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி வல்வெட்டித்துறையில் நடந்த களவுச் சம்பவத்தில் ஐந்தரை இலட்சம் ரூபாய் பணமும் 16 பவுண் நகைகளும் களவு போன சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு ஐந்து சந்தேக நபர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# விடைபெற்றார் விஜயகாந்த்



வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தே.மு.தி.க நிறுவனத் தலைவரான விஜயகாந்த் (வயது 71) சிகிச்சை பலனின்றி இன்று காலமானார். தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் மரணம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. விஜயகாந்த் மரணத்தால் தே.மு.தி.க தொண்டர்கள் கண்ணீர் விட்டு கதறி அழுது வருகின்றனர்.

“நிமோனியாவுக்காக அனுமதிக்கப்பட்ட அவர், வென்டிலேட்டரில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. மருத்துவர்களின் தீவிர முயற்சியும் பலனளிக்காமல் அவர் இறந்து விட்டார்” என மருத்துவமனை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக “மருத்துவப் பரிசோதனையில் கப்டன் அவர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மூச்சுவிடுவதில் சிரமம் இருப்பதால் வெண்டிலேட்டர் சிகிச்சை கொடுக்கப்படுகிறது” என்று தே.மு.தி.க வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இத்தகைய சூழலில் தே.மு.தி.க நிர்வாகிகளும் தொண்டர்களும் விஜயகாந்தின் இல்லத்தில் குவிந்து வருகிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளாக உடல்நலம் குன்றியிருக்கும் விஜயகாந்த் பலதருணங்களில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்திருக்கிறார்.

கடந்த மாதம் மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விஜயகாந்த் கடந்த 11 ஆம் திகதி வீடு திரும்பினார். கட்சியின் பொதுக்குழு கூட்டத்திலும் பங்கேற்றார்.

செவ்வாய்க்கிழமையன்று மீண்டும் மருத்துவமனை சென்ற விஜயகாந்துக்கு வழக்கமான மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக கட்சியின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அவர் காலமானார். அவரது உடல் தே.மு.தி.க கட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. முழு அரசியல் ம்மரிதாலையுட தேசிய முற்போக்கு திராவிட கழகம் 2005 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தி.மு.க, அ.தி.மு.க என திராவிட கட்சிகளால் ஆளப்பட்ட தமிழ்நாட்டில் ஒரு புதிய மாற்றாக தே.மு.தி.க அமைந்தது.

தி.மு.க மற்றும் அ.தி.மு.க.வுக்கு மாற்றாக வந்திருப்பதாக அறிவித்த விஜயகாந்த், 2006 சட்டமன்ற தேர்தல்கள் மற்றும் 2009 மக்களவை தேர்தல்களில் கூட்டணி இல்லாமல் தனியாகப் போட்டியிட்டார்.

கட்சி தொடங்கி ஓராண்டிலேயே 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் 8.4% வாக்குகள் பெற்றிருந்தார். 2009 மக்களவை தேர்தல்களில் 10.3% வாக்குகள் பெற்றிருந்தார். ஆனால், அதன்பின் கூட்டணி அரசியலில் ஈடுபட்டார். அப்போது, தே.மு.தி.கவுக்கு கிடைத்து வந்த ஆதரவு சரிந்தது. 2011 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல்களில் 7.9% வாக்கு சதவீதமும் 2014 ஆம் ஆண்டு மக்களவை தேர்தல்களில் 5.1% வாக்கு சதவீதம் பெற்றது, தே.மு.தி.க. அடுத்து நடைபெற்ற 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல்களில் 2.4% வாக்குகளும் 2021 ஆம் ஆண்டு மக்களவை தேர்தல்களில் 0.43% வாக்குகள் பெற்றார்.

மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் 1952 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் திகதி அழகர்சாமி என்ற ரைஸ்மில் முதலாளியின் மகனாகப் பிறந்தார் விஜயராஜ் என்ற விஜய காந்த். படிப்பில் பெரிதாக ஆர்வமில்லாமல், விஜயகாந்த் தினமும் நண்பர்களுடன் இணைந்து தியேட்டருக்குச் சென்று எம்.ஜி.ஆர் திரைப்படங்கள் பார்ப்பது வழக்கம்.



“ஒரு கட்டத்தில் எம்.ஜி.ஆரின் திரைப்படங்களில் ஒவ்வொரு காட்சியையும் விளக்குமளவிற்கு சினிமாவின் மீது ஆர்வமானார். அதனைத் தொடர்ந்து, விஜயகாந்த் சென்னைக்குச் சென்று சினிமாவில் சாதிக்க வேண்டுமென முடிவெடுத்து விட்டார்” என்று அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகிறார்கள்.

சென்னை வந்தவரை தமிழ் சினிமா உடனே அள்ளி அணைத்துக் கொள்ளவில்லை. எங்கு சென்றாலும் விஜயகாந்த் கறுப்பு என அவரது நிறத்தைக் காரணம் காட்டியே பல நிராகரிப்புகளை அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

தொடர் முயற்சியால், 1979 ஆம் ஆண்டு எம்.ஏ. காஜாவின் இயக்கத்தில் “இனிக்கும் இளமை” என்ற திரைப்படத்தில் நடித்து தன் திரைப்பயணத்தைத் தொடங்கினார்.

எம்.ஏ.காஜாவிற்கு விஜயராஜ் என்ற பெயரில் விருப்பமில்லை அந்த கால கட்டத்தில் ரஜினிகாந்த் புகழின் உச்சத்திலிருந்ததால் அவரது பெயரிலிருந்த காந்த் என்பதை எடுத்து, விஜயராஜ் என்ற பெயரில் இணைத்து விஜயகாந்த் எனப் பெயர் மாற்றம் செய்தார்.

1979 ஆம் ஆண்டு “இனிக்கும் இளமை” என்ற திரைப் படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமானார். 1980 இல் வெளியான “தூரத்து இடி முழக்கம்” மற்றும் 1981 இல் வெளியான “சட்டம் ஒரு இருட்டறை” என்ற திரைப்படங்கள் மூலம் மக்கள் மனதில் இடம்பிடிக்க ஆரம்பித்தார். திரைப்படங்கள் மூலம், கிராமப்புறங்களில் விஜயகாந்துக்கு இருந்த ஆதரவின் காரணமாக அவர் கறுப்பு எம்.ஜி.ஆர் என்று அழைக்கப்பட்டார். இந்த ஆதரவே, அரசியலில் அவரது ஆரம்ப கால வெற்றிகளுக்கு காரணமாக இருந்தது.

1991 ஆம் ஆண்டு வெளியான “கப்டன் பிரபாகரன்” என்ற திரைப்படத்தின் வெற்றியே, அவருக்கு கப்டன் என்ற பட்டத்தை பெற்று தந்தது. 1992 இல் வெளியான “சின்ன கவுண்டர்” திரைப்படம் அவரது சினிமா பயணத்தில் முக்கியமான திரைப்படமாகும்.

அவருக்கு 2001 ஆம் ஆண்டு தமிழக அரசு கலைமாமணி விருது வழங்கியது. 2002 இல் வெளியான “ரமணா” திரைப்படத்துக்காக தமிழ்நாடு அரசு திரைப்பட விருது பெற்றார்.

‘வைதேகி காத்திருந்தாள்’, ‘உழவன் மகன்’, ‘கப்டன் பிரபாகரன்’, ‘வானத்தைப் போல’, ‘தவசி’, ‘ரமணா’ என இதுவரை 150 திரைப் படங்களுக்கும் மேல் நடித்துள்ள விஜயகாந்த், 1984 ஆம் ஆண்டு மட்டும் ஒரே ஆண்டில் 18 திரைப்படங்களில் நடித்து சாதனை புரிந்தார்.

# சென்னை அணியை வாங்கிய நடிகர் சூர்யா

ஐ.எஸ்.பில் எனப்படும் இந்தியன் ஸ்ட் ரீட் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் சென்னை அணியை வாங்கியுள்ளார் தமிழ் சினிமாவின் பிரபல நடிகர் சூர்யா. இதனை அதிகாரபூர்வமாக தனது எக்ஸ் பக்கத்தில் அறிவித்துள்ளார்.


ரி20 கிரிக்கெட் போட்டிகளின் அடுத்த வெர்சனாக ரி10 போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 10 ஓவர்கள் மட்டுமே நடத்தப்படும் இந்த வகையான ரி10 போட்டிகள் ஐக்கிய அரபு அமீரகத்தில் பிரபலமாக நடத்தப்பட்டு வருகின்றன. தற்போது இந்தியாவிலும் இந்த வகையான கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

CCS Sports LLP எனும் நிறுவனம் ISPLரி 10 எனப்படும் இந்தியன் ஸ்ட்ரீட் பிரீமியர் லீக் என்கிற பெயரில் 10 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரை அறிமுகப்படுத்தியிருக்கிறது.

இத்தொடரில் ஸ்டார் கிரிக்கெட் வீரர்கள் யாரும் இடம்பெறப் போவதில்லை. மாறாக, உள்ளூர் அளவில் நல்ல திறமையோடு இருக்கும் வீரர்களைக் கொண்டு இந்த கிரிக்கெட் போட்டி நடக்கவுள்ளது. சுமார் ஒரு மாதத்துக்கு முன்பு இந்தத் தொடரின் அறிமுக நிகழ்வு நடந்தது. இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி இத்தொடரின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மற்ற வகை கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் அதே மைதானங்களில் தான் இந்தத் தொடரும் நடைபெறும் என்றாலும், டென்னிஸ் வகை பந்துகள் மட்டுமே இந்தப் போட்டிகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

வரும் மார்ச் 2 ஆம் திகதி முதல் மார்ச் 9 ஆம் திகதி வரை மொத்தம் 19 போட்டிகள் நடைபெறவிருக்கும் இத்தொடரில் மும்பை, ஹைதராபாத், சென்னை, பெங்களூர், கொல்கத்தா, ஸ்ரீ நகர் என 6 அணிகள் பங்கேற்கவுள்ளன. இதில் மும்பை அணியை பாலிவுட்டின் பிக் பி அமிதாப் பச்சனும் ஹைதராபாத் அணியை நடிகர் ராம் சரணும் வாங்கியுள்ளனர். பெங்களூரு அணியை ஹிரித்திக் ரோஷன் வாங்கியுள்ளார்.




## இந்தியாவுக்கு எதிராக 9 ஆண்டுகளுக்கு பிறகு சதம் அடித்த வீரர்

2014 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு சொந்த மண்ணில் இந்தியாவிற்கு எதிராக சதம் அடித்த வீரர் என்ற பெருமையை பெற்றார் டீன் எல்கர்.

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி செஞ்சுரியனில் நடைபெற்று வருகிறது.

தென்னாபிரிக்க அணி வீரர் டீன் எல்கர் ஆட்டமிழக்காமல் 211 பந்துகள் களத்தில் நின்று 140 ரன்கள் எடுத்தார். இதன் மூலம் சர்வதேச டெஸ்ட் தொடரில் 14 ஆவது சதத்தைப் பதிவு செய்தார்.

இந்திய அணி கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் தென்னாபிரிக்காவில் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.




தென்னாப்பிரிக்க மண்ணில் இந்திய அணி விளையாடிய 7 டெஸ்ட் தொடரில் எந்த வீரரும் சதம் அடித்ததில்லை. இச்சூழலில், அந்த சாதனையை டீன் எல்கர் படைத்துள்ளார்.

சொந்த மண்ணில் இந்திய அணிக்கு எதிராக டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் தென்னாபிரிக்க வீரராக டீன் எல்கர் சதம் விளாசி சாதனை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## பிரிஸ்பேன் இன்டர்நேஷனலில் மீண்டும் நவோமி ஒசாகா?

முன்னாள் நம்பர் 1 வீராங்கனையான நவோமி ஒசாகா பிரசவத்தின் பின்னர் பயிற்சி பெற்றார், இரண்டு முறை அவுஸ்திரேலிய மற்றும் யு.எஸ் ஓபன் சாம்பியனான ஒசாகா, கடந்த ஆண்டு மெல்போர்னில் நடந்த அவுஸ்திரேலிய ஓபனிலிருந்து விலகினார், பின்னர் தான் கர்ப்பமாக இருப்பதை வெளிப்படுத்தினார்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஜப்பானிய வீரரும் அவரது அமெரிக்க ராப்பர் காதலரும் கோர்டே ஜூலை மாதம் லாஸ் ஏஞ்சல் ஸில் மகள் ஷாய்க்கு பெற்றோரானார்கள்.

2021 ஆம் ஆண்டு நியூயோர்க்கில் நடந்த யு.எஸ் ஓபனிலிருந்து ஒசாகா ஒரு ஆட்டத்தில் மட்டுமே விளையாடியுள்ளார். செப்ரெம்பர் 2021 இல் டோக்கியோவில் நடந்த பான் பசுபிக் ஓபனில் டாரியா கவ்ரிலோவாவை 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தார்.

அவுஸ்திரேலிய வீரருக்கு முழங்காலில் பலத்த காயம் ஏற்பட்டு போட்டியில் ஓய்வு பெற வேண்டியிருந்தது.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 28.12.2023 அன்று வெளியிடப்பட்டது.